# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 73/பேரூ/2024**
**நாள் : 13.08.2024**

திரு.தி. மணிகண்டன்,
வெண்ணந்தூர்,
நாமக்கல் மாவட்டம். – மனுதாரர்

செயல் அலுவலர்,
வெண்ணந்தூர் பேரூராட்சி
நாமக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர், ராசிபுரம் தாலுக்கா, எண்.8/37, நெசவாளர் கூட்டுறவு சங்க தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு.தி.மணிகண்டன் என்பவரது 26.07.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2024 அன்று பெறப்பட்டு, 73/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. தி. மணிகண்டன் என்பவர் தனது 26.07.2024 நாளிட்ட மனுவில், நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் பேரூராட்சியில் மனுதாரராகிய தான் 11.07.2012 முதல் மின்வினைஞர் (Electrician) பணியில் சேர்ந்து தொடர்ந்து 6 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்ததாகவும் 23.08.2018 அன்று தனது திருமணத்திற்காக பேரூராட்சி செயல் அலுவலரின் முன்அனுமதியோடு விடுப்பு எடுத்து மீண்டும் 26.08.2018 அன்று பணியில் சேர்ந்த போது, பேரூராட்சி செயல் அலுவலர் தன்னை

கடிந்து கொண்டு, பணிக்கு வரவேண்டாம் என வாய்மொழி உத்தரவுமூலம் 26.08.2018 அன்று தன்னை பணிநீக்கம் செய்து உள்ளார் என புகாராக தெரிவித்துள்ளார்.

(2) மனுதாரர் வெண்ணந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் வாய்மொழி மூலம் பணிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து, மாண்பமை சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு (தொழிற்தகராறு எண்.47/2019) தொடர்ந்து அவ்வழக்கில் மாண்பமை சேலம், தொழிலாளர் நீதிமன்றம் தனது 06.09.2022 நாளிட்ட தீர்ப்புரையில் , மனுதாரரின் மனுவானது (தொழிற்தகராறு எண்.47/2019) செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு வாய்மொழியாக பணிநீக்கம் செய்யப்பட்ட 26.08.2018ஆம் தேதி முதல் பணித்தொடர்ச்சியுடன் கூடிய வேலையும், பின்சம்பளமும் மற்றும் சட்டப்படியான இதர பணப்பயன்களையும் கணக்கிட்டு 2 மாதக் காலத்திற்குள் வழங்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது.

(3) இந்நிலையில் மனுதாரர் தனது மனுவில் மேற்கண்ட சேலம், தொழிலாளர் நீதிமன்ற ஆணைப்படி, தனக்கு பணியினை வழங்குமாறு பேரூராட்சி செயல் அலுவலரிடம் பலமுறை கோரியும் எவ்வித நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதால், தனக்கு மின்வினைஞர் (Electrician) பணியினை வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

(4) மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள ஆவணங்களை ஆய்வு செய்யப்பட்டதில் மாண்பமை சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தால் மனுதாரருக்கு மீண்டும் பணியினை வழங்கிட வேண்டும் என்கிற 06.09.2022 நாளிட்ட தீர்ப்புரையை பேரூராட்சி செயல் அலுவலரால் செயல் படுத்தாதை எதிர்த்து மனுதாரர் மாண்பமை சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு (வழக்கு எண்.REP No. /2023 in I.D.No.47/2019) தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிய வருகிறது.

(5) மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)ன் படி நீதிமன்றமொன்றின்முன், நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால் இப்பொருள்

தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு ஆகஸ்டு 13 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. தி.மணிகண்டன்,
8/73, நெசவாளர் கூட்டுறவு சங்க தெரு,
ராசிபுரம் தாலுகா,
வெண்ணந்தூர்,
நாமக்கல் மாவட்டம் – 637 505

2) செயல் அலுவலர்,
வெண்ணந்தூர் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 0 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்.